மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO. 113/2008

14.03.2019

9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா. 1 திரு.சக்திவேல் – த/பெ. நாச்சிமுத்து

தாவாசொத்துக்கள் 1, 2 மற்றும் 8,9 பிரதிவாதிகளின் பிதுரார்ஜித சொத்துக்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மாரப்ப கவுண்டர் எனது தாத்தா. 2ம் பிரதி வாதி நாச்சிமுத்து எனது தகப்பனார். 8, 9 பிரதிவாதிகள் எனது அத்தைகள் அதாவது மாரப்ப கவுண்டரின் பெண்மக்கள்கள் ஆவார்கள். எனது தாத்தா மாரப்ப கவுண்டருக்கு 15.12.1971ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஏ செட்யூல் சொத்துக்களாக பூர்வீக சொத்துக்களாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி லட்சுமிக்கு எப்போது திருமணமானது என்று எனக்கு தெரியாது. மயிலாத்தாளுக்கும் லட்சுமிக்கும் 1989க்கு பிறகு தான் திருமணமானது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே சமூகம் நீதிமன்றத்தில் எனது தகப்பானரை எதிர்த்து அ.வ.333/2004 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது லட்சுமி, மயிலாத்தாள் ஆகியோர்களை கட்சி சேர்க்க வேண்டும் என என் தாத்தா மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த இடைநிலை மனு விண்ணப்ப 675/2007 என்ற மனுவில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் தனக்கும் தனது மகன் நாச்சிமுத்துவிற்கும் மகள்கள் லட்சுமி, மயிலாத்தாள் ஆகியோர்களுக்கும் சரிசம பாகம் உள்ளது என்று சொல்லியிருந்தார் என்றால் சரிதான். என் தாத்தா அந்த மனுவினை வலியுறுத்தாத காரணத்தால் அந்த மனு 28.2.2008ல் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். அதற்கு பின்பு இடைநிலை மனு 469/2008ல் தன்னையும் 8ம் பிரதிவாதியையும் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி 9ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவானது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் என் தாத்தா, என் தகப்பனார், மயிலாத்தாள் ஆகியோர்கள் எந்த ஒரு எதிருரையும் தாக்கல் செய்யாததால் அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு அனுமதிக்கப்பட்ட பின்னர் மாரப்ப கவுண்டர் வழக்குரையில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 12.1.2010ல் வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். லட்சுமி மனு போட்ட விபரம் எனக்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான்.

Sd/- சக்திவேல்

நான் இந்த வழக்கை 2008 ம் ஆண்டு தான் தாக்கல் செய்துள்ளேன். நான் 2008 ல் தாக்கல் செய்தபோது மயிலாத்தாள், லட்சுமி ஆகியோர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தபோதே லட்சுமி, மயிலாத்தாள் ஆகியோர்களுக்கு தாவாசொத்தில் பொதுவில் நான்கில் ஒரு பங்கு (1/4) பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். இன்று வரை மயிலாத்தாள், லட்சுமி ஆகியோர்களுக்கும் எனக்கும் இடையே எந்த கறாரும் நடக்கவில்லை என்றால் சரிதான். அ.வ,333/2004, இடைநிலை மனு எண் 675/2007 ஆகியவைகள் நிலுவையில் இருக்கும்போது எனது தகப்பனார், வி.எஸ்,.ஆனந்தன் என்பவருக்கு தாவாசொத்துக்களில் சரிபாதி சொத்துக்கள் இருப்பதாக சொல்லி செல்லாத பவர் ஆப் அட்டானியை 11.2.2008 அன்று உருவாக்கி வைத்தார் என்றால் சரிதான். செல்லாத பவர் ஆப் அட்டானியை வைத்து எனது தகப்பனார் 5, 6 பிரதிவாதிகள் பெயரில் ஒரு பொய்யான 11.3.2008 ம் தேதியிட்ட சட்டப்படி செல்லாத கிரயப்பத்திரத்தை உருவாக்கி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தாவாசொத்துக்களில் பொதுவில் ¼ பங்கு மட்டும் தான் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதனால் தாவாசொத்துக்களில் சரிபாதி என சொல்லப்பட்டு உருவாக்கப்பட்ட பவர் ஆப் அட்டானி மற்றும் கிரய ஆவணம் இல்லா நிலையது, சட்டப்படி செல்லாது மற்றும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். மாரப்ப கவுண்டர் மற்றும் மயிலாத்தாள் எல்லோரும் சேர்ந்து தாவாசொத்துகக்ளில் பொதுவில் 2.73-1/8 பூமியை பொறுத்து ராமசாமி மகன் அருண்குமார் பெயருக்கு அ.வ.333/2004 நிலுவையில் இருக்கும்போது 26.5.2008 அன்று ஒரு பொய்யான சட்டப்படி செல்லாத ஒரு கிரய பத்திரத்தை உருவாக்கி வைத்தார்கள் என்றால் சரிதான். ஏ.கே.ராமசாமி என்பவர் 8 ம் பிரதிவாதி மயிலாத்தாளின் கணவர். அருண்குமார் என்பவர் 8 ம் பிரதிவாதியின் மகன். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது தாத்தா மாரப்ப கவுண்டர் மற்றும் அருண்குமார் கூட்டாக சேர்ந்து தாவாசொத்துக்களில் சரிபாதி என போட்டு சுந்தரசாமி கவுண்டர் மகன் விஸ்வநாதன்பெயரில் 22.6.2009 ல் ஒரு பொய்யான சட்டப்படி செல்லாத ஒரு கிரய பத்திரத்தை உருவாக்கி வைத்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆனந்தன், விஸ்வநாதன், அருண்குமார், ஏ.கே.ராமசாமி ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 11.2.2008 ம் தேதி பவர் பத்திரம், 11.3.2008, 26.5.2008, மற்றும் 22.6.2009 ம் தேதிகளிட்ட கிரய பத்திரங்கள் அ.வ.333/2004 நிலுவையில் இருக்கும்போது மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளதால் லிஸ் பெண்டன்ஸ் (வழக்கிடை மாற்றம் ) என சட்டக் கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரப்ப கவுண்டரே பழைய வழக்கில் மகள்களுக்கு தலா ¼ பங்கு உள்ளது என்று சொன்னதால் மேற்படி பவர் ஆப் அட்டானி மற்றும் கிரய பத்திரங்கள், பொய்யானவை, இல்லா நிலையன, சட்டப்படி செல்லாத, நடைமுறைக்கு வராத ஆவணங்கள் என்றால் சரிதான்.

Sd/- சக்திவேல்

மாரப்ப கவுண்டருக்கோ, என் தகப்பானாருக்கோ, மயிலாத்தாளுக்கோ தாவாசொத்தில் தனிப்பட்ட உரிமையோ, பாத்தியதையோ கிடையாது என்றால் சரிதான். 9ம் பிரதிவாதிக்கும் தாவாசொத்தில் பங்குரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரம் மற்றும் கிரய ஆவணங்களில் லட்சுமி ஒரு தரப்பினரோ, அல்லது சாட்சியோ கிடையாது என்றால் சரிதான். மேற்படி பத்திரங்களில் நானும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான்கு பத்திரங்களில் உள்ள வாசகங்கள் பொய்யானவை என்று லட்சுமி சொல்கிறார் என்றால் சரிதான். அந்த பத்திரங்கள் 9ம் பிரதிவாதி லட்சுமிக்கு தாவாசொத்தில் உள்ள சட்டப்படியான உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். பொய் பத்திரங்களில் கிரயம் கொடுத்ததாகவும், சுவாதீனம் கொடுத்ததாகவும் உள்ள வாசகங்கள் தவறானவை என்றால் சரிதான். வி.எஸ்,.ஆனந்தன், அருண்குமார், விஸ்வநாதன், ஏ.கே.ராமசாமி ஆகியோர்களுக்கும் அந்த பத்திரங்கள் மூலம் எந்தவித உரிமையோ, பாத்தியதையோ சித்தரிக்கவில்லை என்றால் சரிதான். விஸ்வநாதன் 22.6.2009ம் தேதியிட்ட செல்லாத கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் அவரது பெயரை தாவாசொத்துக்களை பொறுத்து உள்ள வருவாய் ஆவணங்களில் தவறாக பெயரை சேர்த்து கொண்டார் என்றால் சரிதான். அவ்வாறு ஏற்படுத்திகொண்ட செல்லாத வருவாய் ஆவணங்களில் விஸ்வநாதன் தாவாசொத்துக்களில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரிதான். இவ்வாறு பொய் பத்திரங்களை ஏற்படுத்தியிருந்தாலும், லட்சுமி என் தாத்தா உயிருடன் உள்ள வரை அவருடன் சேர்ந்து தாவாசொத்துக்களில் என் தகப்பனார் மற்றும் மயிலாத்தாள் ஆகியோர்களுடன் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். என் தாத்தா இறந்தபின்பும் லட்சுமி 2 மற்றும் 8 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவாசொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பொய் பத்திரங்கள் செய்து வில்லங்கம் செய்ததால் லட்சுமி பங்கு கேட்டும் கொடுக்காததால் தனக்கு பாத்தியப்பட்ட ¼ பங்கை பொறுத்து பாகம் கோரியும், தனி சுவாதீனம் கோரி திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.50/2011 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கினை என் தகப்பனார் உள்ளிட்ட மொத்தம் 10 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். லட்சுமி போட்ட மேற்படி வழக்கு பற்றி எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி மாரப்ப கவுண்டர் 7.3.2011 அன்று தனக்கு பாத்தியப்பட்ட ¼ பங்கை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரது பொதுவில் ¼ பங்கு எனது தகப்பனார், மாரப்ப கவுண்டரின் மனைவி மற்றும் மகள்களுக்கும் வாரிசுரிமைப்படி பாத்தியப்படும் என்றால் சரிதான்.

Sd/- சக்திவேல்

அ.வ.50/2011 நிலுவையில் இருக்கும்போது விஸ்வநாதன், மயிலாத்தாள் கணவர் ராமசாமி பெயரில் 30.11.2011 அன்று பொய்யான ஒரு கிரயப் பத்திரத்தை தாவாசொத்துக்களின் ஒரு பகுதியை பொறுத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரமும் சட்டப்படி செல்லாது, இல்லா நிலையது என்றால் சரிதான். செல்லாத அந்த பத்திரப்படி தாவாசொத்துக்களில் ஏ.கே.ராமசாமிக்கு எந்த வித பாத்தியமோ, உரிமையோ இல்லை என்றால் சரிதான். 30.11.2011 ம் தேதியிட்ட பத்திரமும், இல்லா நிலையது, சட்டப்படி செல்லாது மற்றும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். விஸ்வநாதன் 30.8.2011 அன்று ஏற்பட்டதாக சொல்லப்படும் கிரய பத்திரத்தின் அடிப்படையில் தனக்கு தாவாசொத்தில் உரிமை உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த 30.8.2011 ல் ஏற்பட்ட கிரய பத்திரமும் இல்லா நிலையது, சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். அ,வ.50/2011 நிலுவையில் இருக்கும்போது தான் 30.8.2011, 30.11.2011 கிரய பத்திரங்கள் ஏற்பட்டதால் மேற்படி கிரயப் பத்திரங்கள் லிஸ் பென்டன்ஸ் கோட்பாடுபடி செல்லாது என்றால் சரிதான். எஸ்.விஸ்வநாதன், ஏ.கே.ராமசாமி ஏற்படுத்திகொண்ட கிரயப்பத்திரங்களில் லட்சுமி தரப்பினரோ, சாட்சியோ அல்ல என்றால் சரிதான். பொய்யான கிரயபத்திரங்கள் லட்சுமிக்கு தாவாசொத்துக்களில் உள்ள சட்டப்படியான உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். அந்த பொய் பத்திரங்களின் அடிப்படையில் விஸ்வநாதனுக்கோ, ராமசாமிக்கோ எந்தவித அனுபவமோ, பாத்தியதையோ தாவாசொத்துக்களின் மீது சித்தரிக்கவில்லை என்றால் சரிதான். மயிலாத்தாள், ராமசாமி, அருண்குமார் ஆகியோர்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருக்கிறார்களா என்றால் ஆமாம். அவர்களுக்கு அ.வ 50/2011 நிலுவையில் இருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். விஸ்வநாதன், ராமசாமி, மற்றவர்களும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாவாசொத்துக்களில் உரிய கிரய தொகை கொடுத்து கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். தாவாசொத்துக்களை விஸ்வநாதன், அருண்குமார்,. ராமசாமி ஆகியோர்கள் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தினை அபகரிக்க வேண்டி பொய் பத்திரங்களை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஏற்படுத்தி கொண்ட அனைத்து பத்திரங்களும் செல்லாது என்றாலும், 9 ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தில் உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். அ.வ.50/2011 ல் சாட்சிகளை முழுமையாக விசாரிக்கப்பட்டும், 26.4.2016 அன்று தாவாசொத்துக்களில் 9 ம் பிரதிவாதிக்கு ¼ பங்கு பாத்தியம் என்று தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 5,6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து கூட்டாக ¼ பங்கு உள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Sd/- சக்திவேல்

இந்த வழக்கின் 5 ம் பிரதிவாதி சுப்பிரமணி இடைநிலை மனு 1533/2017 ல் மாண்புமிகு திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் தோன்றா தரப்பினராக உள்ளார். 9 ம் பிரதிவாதி லட்சுமிக்கு இந்த வழக்கில் அவரை சேர்க்காததால் திருப்பூரில் வழக்கு போடும்போது இந்த வழக்கு பற்றிய விபரம் தெரியாது என்றால் சரிதான். என் தாத்தா மாரப்ப கவுண்டர் இறந்த பின்பு தான் அவரது மனைவி கருப்பாத்தாள், மகள்கள் மயிலாத்தாள், லட்சுமியை முதன்முதலில் கட்சி சேர்த்தேன் என்றால் சரிதான். எந்த வருடம் கட்சி சேர்த்தேன் என்றால் ஞாபகமில்லை. 2014 ல் சேர்த்துள்ளீர்களா என்றால் சரியாக ஞாபகமில்லை. அ.வ.50/2011 ல் என்னையோ, 3, 4 பிரதிவாதிகளையோ கட்சி சேர்க்க சொல்லி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கையும், மேற்படி அ.வ.50/2011 வழக்கையும் சேர்த்து நடத்த வேண்டும் என சொல்லி 6 ம் பிரதிவாதி மல்லிகா தர்மராஜ் திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மாறுதல் மனு 8/2013 என்று மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதில் எனக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. இந்த வழக்கில் சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.50/2011, மற்றும் மாறுதல் மனு 8/2013 நிலுவையில் இருக்கும் விபரம்குறித்து 6 ம் பிரதிவாதி குறிப்பாணை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். திருப்பூரில் உள்ள வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரிந்தும், 8, 9 ம் பிரதிவாதிகளையும், மற்ற பிரதிவாதிகளையும் இந்த வழக்கில் ஆரம்பத்தில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அ.வ,50/2011 ல் என் தகப்பனாருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையும் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் என் தகப்பனாருக்கு வரும் பங்கை பொறுத்து தான் வழக்கு போட வேண்டும் என்றாலும், எல்லா பிரதிவாதிகளையும் சேர்த்து வழக்கு போட்டிருக்க வேண்டியது இல்லை என்றாலும் சரிதான். என் தகப்பனாருக்கு தாவாசொத்துக்களில் பொதுவில் ¼ பங்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு வரும் பொதுவில் வரும் ¼ பங்கில் தான் நான் பங்கு கேட்க முடியும் என்றால் சரிதான். என் தாத்தா மாரப்ப கவுண்டருக்கு அவர் உயிருடன் இருக்கும்வரை தாவாசொத்துக்களில் பொதுவில் ¼ பங்கு தான் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வழக்கில் ஆனந்தன், விஸ்வநாதன், ராமசாமி, அருண்குமார் ஆகியோர்கள் தேவையான தரப்பினர்கள் என்றாலும் அவர்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த காரணத்தாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/- சக்திவேல்

என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே மகள்களுக்கு தலா ¼ பங்கு உள்ளது என்று நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ததாலும், மாவட்ட நீதிமன்றத்தில் பொதுவில் ¼ பங்கு 9 ம் பிரதிவாதிக்கு பாத்தியம் உள்ளது என்று தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால் என் தகப்பனாருக்கு தாவாசொத்துக்களில் சரிபாதி பாத்தியம் என வழக்குரையிலும், சாட்சியத்திலும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். நான் தாவாசொத்துக்களை அனுபவித்து வருவதை காண்பிப்பதற்காக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் என் பெயரில் இல்லை என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டருக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2. முதல் மனைவி பெயர் ஈஸ்வரி., 2 ம் மனைவி பெயர் கனகா. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே 2 ம் திருமணம் செய்து கொண்டார். முதல் மனைவி மூலம் அவருக்கு நான் ஒரே மகன் தான். 2 ம் மனைவி மூலம் 2 மகன்கள். ரஞ்சித்குமார், மற்றும் பரமேஸ் ஆகியோர்கள். நான், என் அப்பா, ரஞ்சித்குமார் மற்றும் பரமேஸ் எல்லோரும் ஒரே குடும்பமாக இருக்கிறோமா என்றால் இல்லை. அப்பா 2 ம் மனைவி மற்றும் மகன்களுடன் வசித்து வருகிறார். என் அப்பா என் அம்மாவிற்கு ஜீவனாம்சம் கொடுக்கிறாரா என்றால் 2 வருடங்களுக்கு முன்பாக ரூ.3,80,000 கொடுத்தார். எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. என் அப்பாவிற்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. 2 ம் மனைவியுடன் என் அப்பா சுக்கம்பாளையத்தில் வசித்து வருகிறார். கதவு எண் தெரியாது. தோட்ட விலாசம் தெரியாது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்பதற்காக நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். இதுவரை என் அப்பா என் தாயாரை விவாகரத்து செய்யவில்லை. திருமணம் ஊர்ஜிதத்தில் தான் இருந்து வருகிறது. என் தகப்பனார் 2 ம் திருமணம் செய்து சுமார் 25 வருடங்கள் ஆகிறது. என் தகப்பனார் 2 ம் திருமணம்செய்தது தவறு என என் தாயார் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இதுவரை எதுவும் எடுக்கவில்லை. நான் என் தகப்பனார் மற்றும் என் தாயார் ஒரே குடும்பமாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு போடுவதற்கு வழக்கறிஞரை பார்த்து பேசியது என் தகப்பனார் தான் என்றால் சரிதான். 8, 9 பிரதிவாதிகள் போட்ட எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் வழக்கறிஞர் சொன்னார். அவர்களுக்கும் தலா ¼ பங்கு உள்ளது என பதில் போட்டிருப்பதாக சொன்னார். என் தகப்பனார் 50/2011 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் தகப்பனார் மீது மட்டும் வழக்கு போடுவதை விட்டு விட்டு தேவையில்லாமல் மற்ற பிரதிவாதிகளையும் 9 ம் பிரதிவாதியையும் சேர்த்திருக்க வேண்டாம் என்றாலும் சரிதான்.

Sd/- சக்திவேல்

நான் 2008 ல் வழக்கு போடும்போது தாவாசொத்தின் மதிப்பு சுமார் 30, 40 லட்ச ரூபாய் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. தாவாசொத்தின் மதிப்பு சரியாக மதிப்பிடு செய்திருந்தால் இந்த நீதிமன்றத்தில் நிதி ஆள்வரைக்கு இந்த வழக்கு வராது என்றாலும், மாவட்ட நீதிமன்றத்தில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவாசொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முந்தைய வழக்குகள், 333/2004, 50/2011, மாறுதல் மனு 8/2013 ஆகிய வழக்குகள் பற்றி எனக்கு நன்றாக தெரிந்திருந்தும், வழக்குரையிலோ, திருத்தப்பட்ட வழக்குரையிலோ அவை பற்றி வேண்டும் என்றே கூறாமல் விட்டு விட்டேன் என்றால் தெரியவில்லை. பிரமாண வாக்குமூலம், கூடுதல் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றிலும் மேற்படி வழக்குகள் பற்றி சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. நான் என் தகப்பனாரின் தூண்டுதலின் பேரில் என் அத்தைகளுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்று கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரை, திருத்தப்பட்ட வழக்குரை மற்றும் சாட்சியத்தில் நான் சொல்லியுள்ள பங்கு விகிதாச்சாரம், தவறானது என்றால் சரியல்ல. அ,.வ.50/2011 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. என்னை கட்டுப்படுத்தாது. அதனால் இந்த வழக்கு எந்தவிதத்திலும் நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், தாவாவில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 9 ம் பிரதிவாதி அவரது பங்கை அனுபவிக்கக்கூடாது என்ற நோக்கத்தில் தான் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று தெரிந்தும் நான் தொடர்ந்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அ.வ.50/2011 ல் இறுதி நிலை தீர்ப்பாணை மனு மூலம் உரிய பங்கை 9 ம் பிரதிவாதி அடைவதை இடையூறு செய்யும் நோக்கத்தில் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 9 ம் பிரதிவாதி செலவு தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- சக்திவேல்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha, ( 14.3.2019)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்